குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், குமாரபாளையம்.

**DVC.NO. 7/2022**

வழக்கு சாட்சி ம.சா.1

2025ம் ஆண்டு அக்டோபர் மாதம் 25–ம் நாள் மனுதாரர் தரப்பு சாட்சியாகிய 1வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு.S.ராஜேந்திரன், உதவியாளர் என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | பாரதி | தொழில் | |
| த/பெ | | வயது | |
| கிராமம் | | | |
| தாலூக்கா | | | |

**நாள் 25.10.2025**

**குறுக்கு விசாரணை**

நாமக்கல் மாவட்டம், குமாரபாளையம் வட்டம், பள்ளிபாளையம், தேவாங்கபுரம், ராமசாமி தெரு,கதவு எண். 28 என்று புகாரில் சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். மேற்படி முகவரி வழக்கிற்காக வாடகைக்கு குடியிருக்கிறேன் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல, எனக்கு சொந்த வீடு இல்லை. மேற்படி முகவரி எனது அத்தையின் வீட்டின் முகவரி ஆகும். நிரந்தர முகவரியாக மேற்படி கண்ட முகவரியை தான் கொடுத்துள்ளேன். என்னால் தாக்கல் செய்யப்பட்ட ம.த.சா.ஆ 1 ஆவணத்திலுள்ள முகவரியில் தான் 2013 முதல் வசித்து வருகிறேன் என்றால் சரிதான். நான் சொல்வது போல் மேற்படி முகவரியில் உள்ள வீடானது சொந்த வீடு தான், வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. வாடகை வீடு இருந்தால் வாடகை ஒப்பந்த பத்திரமோ, போகிய ஒப்பந்த பத்திரமோ தாக்கல் செய்திருப்பேன் என்று சொன்னால் சரியல்ல. நான் என்ன படித்துள்ளேன் என்றால் M.E., படித்துள்ளேன். தற்போது நான் Ph.D படித்து வருகிறேன் என்றால் சரிதான். கடந்த 6 மாதத்திற்கு முன்பு தான் சேர்ந்தேன். நான் தற்போது Nandha College of Engineeringல் Professor ஆக வேலை செய்து வருகிறேன் என்றால் சரிதான். Assistant Professor ஆக வேலை செய்து வருகிறேன். மேற்படி கல்லூரி Anna University Affiliated என்றால் Autonomous College ஆகும். Anna University மேற்பார்வையில் தான் இயங்கி வருகிறது என்றால் சரிதான். மேற்படி பல்கலைகழகத்தின் Websiteல் நான் Ph.D படித்து முடித்து விட்டதாக காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் Bracketல் இருந்தால் நான் படித்து முடிக்கவில்லை என்று அர்த்தம், அவ்வாறு தான் உள்ளது. என்னுடைய திருமணத்திற்கு வரதட்சணையாக 25 பவுண் போட்டதாக சொல்லி உள்ளேன், குறிப்பிட்டு என்னென்ன

நகைகள் என்று சொல்லவில்லை என்றால் சரிதான். உண்மையில் 25 பவுண் போட்டிருந்தால், அதற்கான ஆவணமோ அல்லது புகைப்படமோ தாக்கல் செய்திருப்பேன் என்று சொன்னால் சரியல்ல.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது).

**Sd/- Tmt.A.K.Padmapriya,**
**Judicial Magistrate,**
**Kumarapalayam.**